**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 164/2023**
**வழக்கு சாட்சி PW–16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr. தர்மராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சிதம்பரநாடார் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(3, 7, 10 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆவுடையானூர் சி.ஜே.மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். 01.07.2022 அன்று அதிகாலை 01.30 மணியளவில் 85 வயதுடைய அருணாச்சலம் என்ற நபர் என்னுடைய மருத்துவமனைக்கு ஜெகன் என்பவரால் அழைத்து வரப்பட்டார். அவர் முந்தைய நாள் 07.30 மணியளவில் தன் மனைவியுடன் வீட்டில் இருந்தபோது அடையாளம் தெரியாத நபர்கள் தன்னுடைய கைகளை பின்புறமாக கட்டி தன்னுடைய இடுப்பு பகுதியில் மிதித்ததாகவும், அதனால் தன்னுடைய இடது இடுப்பில் வலியும் அதன் பின் அவருடைய காலை அசைக்க முடியாமல் போனதாகவும் கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவரது உடம்பில் கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). அவருடைய இடது கால், இடுப்பு பகுதியில் சிறிய வீக்கமும், இடது கால் வெளிப்பக்கமாக அதிகமான அளவில் திரும்பிய நிலையிலும், காலின் நீளம் குறைந்த நிலையிலும் இருந்தது.

அவருடைய இடுப்பு பகுதிக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்தபோது அவருடைய இடது பீமர் எலும்பின் கழுத்து பாகம் உடைந்த நிலையில் இருந்தது.

அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் 06.07.2022 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் எனச் சான்று வழங்கினேன். அந்தச் சான்று **அ.சா.ஆ.25** ஆகும். அவருடைய சிகிச்சை குறிப்புகள் மற்றும் எக்ஸ்–ரே எடுத்து வந்துள்ளேன். சிகிச்சை குறிப்புகள் சா.சா.ஆ.1 ஆகும். எக்ஸ்–ரே –(8 எண்ணம்) – சா.சா.ஆ.2 வரிசை ஆகும்.

அதே நாள் இதே சம்பவத்தில் காயம்பட்டதாக அருணாச்சலம் என்பவரின் மனைவியான 82 வயதுடைய ஜாய் சொர்ணதேவி என்பவரும் அழைத்து வரப்பட்டிருந்தார். அவர் என்னிடம் அடையாளம் தெரியாத நபர்களால் புறங்கை கட்டப்பட்டு, அவ்வாறு கட்டும்போது இரண்டு புஜத்திலும் வலி வந்ததாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). இரண்டு புஜங்களிலும் வீக்கம் காணப்பட்டது. அவரால் அவருடைய வலது, இடது கையை அசைக்க முடியவில்லை.

அவருக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்தபோது, அவருடைய வலது க்யுமரஸ் எலும்பின் கழுத்து பாகம் உடைந்திருந்தது. இடது எலும்பின் உருளை பகுதி 3 பாகங்களாக உடைந்திருந்தது.

அவருக்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் 07.07.2022 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் எனச் சான்று வழங்கினேன். அந்தச் சான்று **அ.சா.ஆ.26** ஆகும். அவருடைய சிகிச்சை குறிப்புகள் மற்றும் எக்ஸ்–ரே எடுத்து வந்துள்ளேன். சிகிச்சை குறிப்புகள் சா.சா.ஆ.3 ஆகும். எக்ஸ்–ரே –(6 எண்ணம்) – சா.சா.ஆ.4 வரிசை ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:47:50 +0530